**Spl.SC.No. 19/2024** Dated:. 07.11.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**அ.சா.1 தாமரை செல்வி**

**மனுவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என் ஊரான நெறிஞ்சிப்பட்டி கமுதிக்கு எந்த திசையில் உள்ளது என்றால் திசை தெரியாது, ஆனால் கமுதியிலிருந்து சாயல்குடி செல்லும் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலையில் உள்ளது. நெறிஞ்சிப்பட்டிக்கும் கமுதிக்கும் 10 கி.மீ இருக்குமா என்றால் 12 கி.மீ இருக்கும். எனது ஊரிலிருந்து அம்மன்பட்டி கிராமம் எந்த திசையில் உள்ளது என்றால் தெரியாது. கமுதியிலிருந்து அருப்புக்கோட்டை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது, ஆனால் பஸ்ஸில் சென்றால் 45 நிமிடங்களில் செல்லலாம். கமுதியிலிருந்து இடைச்சியூரணி விலக்கு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். கமுதியிலிருந்து கோட்டை மேடு எவ்வளவு தூரம் இருக்கம் என்றால் அரை கி.மீ தூரம் இருக்கும். இடைச்சியூரணிக்கு எப்போதாவது சென்றுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அருப்புக்கோட்டைக்கு பஸ்ஸில் அடிக்கடி சென்றுள்ளேன். என்னுடன் வந்த முருகவேல் என் தங்கையின் கணவர் என்றால் என் சித்தப்பா மகளின் கணவர். என் கணவரை பிரிந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் இப்போதிருந்து 8 வருடங்கள் ஆகிறது. என் கணவர் எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் தெரியாது. நெறிஞ்சிப்பட்டி என்பது ஒரு பெரிய கிராமம் என்றால் சரிதான். என்னுடன் வந்த என் மாமா முருகவேல் இளையான்குடிக்கு அருகே அவருடைய சொந்த ஊர் எந்த ஊர் என்றால்

ஊர் பெயர் தற்போது ஞாபமில்லை, ஆனால் இளையான்குடி அருகே அவரது சொந்த கிராமத்தில் வசித்து வருகிறார். முருகவேல் சாலைகிராமம் என்ற ஊரில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார் என்றால் தெரியாது, சிவகங்கையில் வேலை பார்த்து வந்ததாகத்தான் நான் கேள்விப்பட்டேன். அவர் போலிஸ் வேலை பார்த்து வருகிறார் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். முருகவேல் அடிக்கடி நெறிஞ்சிப்பட்டியில் உள்ள என் வீட்டிற்கு வருவார் என்றால் என் சித்தப்பா வீட்டிற்கு வருவார். என் சித்தப்பா வீடு எங்கள் வீட்டிற்கு எந்த பக்கத்தில் உள்ளது என்றால் பக்கத்து பக்கத்து வீடு. என் சித்தப்பா வீட்டிற்கு வரும் மாமா முருகவேல் எங்கள் வீட்டிற்கும் வருவார் என்றால் சரிதான். முருகவேலுக்கும் எனக்கும் பழக்கம் என்றால் தங்கையின் கணவர் என்ற முறையில் பேசுவோம். எனக்கும் முருகவேலுக்கும் தவறான உறவு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு குடலிறக்கம் ஏற்பட்டு அதற்கு அறுவை சிகிச்சை செய்தபிறகு எத்தனை முறை அதற்காக அருப்புக்கோட்டை சென்றுள்ளேன் என்றால் வலி வரும்போதெல்லாம் சென்றுள்ளேன். நான் அருப்புக்கோட்டைக்கு செல்லும்போதெல்லாம் தனியாக செல்வேன் என்றால் சரியல்ல, என் அம்மா அல்லது அப்பாவுடன் செல்வேன். என் அம்மா, அப்பா கூட்டி செல்லும்போது நான் பஸ்ஸில்தான் செல்வேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றுதான் நான் முருகவேலை அழைத்து சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினம் எங்கள் ஊரில் உள்ள ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்ததால் கூட்டி சென்றேன். அருப்புக்கோட்டைக்கு முருகவேல் என்னை கூட்டி செல்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு அவர் என் ஊருக்கு வந்திருந்தார் என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த பிறகு

நான் அருப்புக்கோட்டைக்கு செல்லாமல் கமுதி வழியாக எங்கள் ஊருக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து என் ஊருக்கு திரும்பி செல்லும்போது முருகவேல் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்துதான் சென்றேன் என்றால் சரிதான். நான் கமுதி காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் அசிங்கமாக இருந்ததால் கொடுக்கவில்லை. எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன்.அந்த இரண்டு நாட்களும் முருகவேல் எங்கிருந்தார் என்றால் அவர் என்னை வீட்டில் விட்டுவிட்டு அவர் ஊருக்கு சென்றுவிட்டார். இரண்டு நாட்கள் கழித்து காவல்நிலையத்தில் புகார் கொடுக்க யாருடன் சென்றேன் என்றால் நான் மட்டுமே சென்றேன். புகாரை யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். புகாரை எங்கு வைத்து எழுதினேன் என்றால் வீட்டில் வைத்து எழுதிக்கொண்டுதான் போனேன். இப்படித்தான் புகாரை எழுதவேண்டுமென யாராவது எனக்கு சொன்னார்களா என்றால் இல்லை. நான் கொடுத்த புகார் என் மாமா முருகவேல் ஆலோசனையின்பேரில் அவரால் தயார் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. இடைச்சியூரணி விலக்கு பேருந்து நிறுத்தம் உள்ள இடம் என்றால் தெரியாது. இடைச்சியூரணி கிராமம் கமுதி–அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டின் வடபுறம் உள்ளது என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் மேற்படி ரோட்டிற்கு வடபுறம்தான் உள்ளது என்றால் திசை எல்லாம் தெரியாது. நான் கொடுத்த புகாரில் சம்பவம் மேற்படி ரோட்டிற்கு எந்த திசையில் நடந்தது என திசை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை, ஆனால் கமுதி–அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டிற்கு

இடதுபுறம் நடந்ததாக சொல்லியுள்ளதாக ஞாபகம். (சாட்சி அழுதுகொண்டே இருக்கிறார்) நானும் முருகவேலும் சென்றபோது வண்டியை நிறுத்திய இடத்திற்கு இருபுறமும் மிளகாய் மற்றும் பருத்தி காடுகள் உள்ளது என்றால் சரியல்ல, சம்பவம் நடந்த பக்கம் கருவக்காடும் எதிர்புறம் வெள்ளைச்சாமி கோவிலும் இருந்தது. நாங்கள் வண்டியை நிறுத்திய இடத்தில் வேற வேற ஆட்கள் இருந்தார்கள் என்றால் இல்லை. நாங்கள் வண்டியை நிறுத்தியபோது கரணும் அவரது அம்மாவும் வந்து நிறுத்தினார்களா என்றால் நிறுத்தி கேட்டார்கள். நான் இயற்கை உபாதை கழிக்க வேண்டும் என கூறியதால் அவர்கள் சரி வாருங்கள் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்கள். நான் வண்டியை நிறுத்திவிட்டு மண் பாதை வழியாகத்தான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். மண்பாதைக்கு இரண்டுபக்கமும் அடர்த்தியாக காட்டு கருவேல் மரங்கள் இருந்தன என்றால் ஞாபகமில்லை. மண்பாதைக்கு கிழக்கிலும் மேற்கிலும் ஆட்கள் உள்ளே போக முடியாத அளவிற்கு அடர்த்தியாக காட்டு கருவேல் மரங்கள் இருந்தன என்றால் சரிதான். கமுதி–அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டில் இருந்து மண் பாதை வழியாக எத்தனை அடி தூரம் சென்றிருப்பேன் என்றால் ஆள் மறைவு தூரம் சென்றிருப்பேன். சிறுநீர் கழிப்பதற்கு முன்பு சம்பவம் நடந்ததா அல்லது பின்பு நடந்ததா என்றால் நான் போன உடனே என்னை சுற்றி வளைத்தார்கள். என்னை சுற்றி வளைத்த இடத்திற்கும் கமுதி–அருப்புக்கோட்டை ரோட்டிற்கும் 50 அடி தூரம் இருக்குமா என்றால் எனக்கு அடி அளவு பற்றி தெரியாது. மூன்று பேர்களும் என்னை சுற்றி வளைத்த உடனே நான் சத்தம் போட்டேன் என்றால் சரிதான். நான் சத்தம் போட்ட உடனே என் மாமா முருகவேல்

அந்த இடத்திற்கு ஓடிவந்துவிட்டார் என்றால் சரிதான். நான் சத்தம் போட்டதை கேட்டு பக்கத்தில் தோட்டத்தில் வேலை பார்த்தவர்களும் ஓடிவந்தார்கள் என்றால் சரியல்ல. என்னை சுற்றி வளைத்த நபர்களின் ஊர், பெயர், தகப்பனார் பெயர் எதுவும் சுற்றி வளைத்தபோது தெரியாது என்றால் சரிதான். என்னை சுற்றி வளைத்த அந்த மூன்று நபர்களையும் அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் புகாரில் என்னை சுற்றி வளைத்த நபர்கள் யார் யார் என அவர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரிதான். வெள்ளை கலர் சட்டை போட்ட பையன் அவனை பிடிடா அஜித் என சொல்லியதால் அந்த மூன்று நபர்களில் ஒரு நபரின் பெயர் அஜித் என அப்போது தெரிந்துகொண்டேன். என் மாமா ஓடிவந்தவுடன் முதலில் பணத்தை பறித்தது என் மாமாவிடமிருந்துதான் என்றால் ஞாபகமில்லை என சாட்சி கூறிவிட்டு தற்போது ஆமாம் என கூறுகிறார். என் மாமா அந்த மூன்று நபர்களிடமும் சண்டை போட்டார்களா என்றால் அந்த மூன்று நபர்களும் கத்தியை வைத்து மிரட்டவும் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தார். என் மாமாவிடமிருந்து பணம் பறித்த இடத்திற்கும் நான் இருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் என் மாமாவை கத்தியை காட்டி மிரட்டி ஒரு இடத்திற்கும் என்னை ஒரு இடத்திற்கும் கொண்டு சென்றுவிட்டதால் எவ்வளவு தூரம் என்று என்னால் சொல்ல இயலாது. என் மாமாவிடமிருந்து பணத்தை பறித்தது எந்த இடம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னை முதல்முதலாக பலாத்காரம் செய்த நபர் என் ரவிக்கையை கிழித்துவிட்டார் என்றால் இல்லை, 2 வது நபராக பலாத்காரம் செய்த நபர்தான் கிழித்துவிட்டார் . முதலாவதாக பலாத்காரம் செய்த நபர் என் உடைகள் எதையும் கிழிக்கவில்லை என்றால்

சரிதான், ஆனால் என்னை அடித்து, ஒத்துக்கொள்ளவில்லை என்றால் உயிரோடு போகமுடியாது என்று மிரட்டி அடித்தார். முதலில் பலாத்காரம் செய்த நபர் என்னை பலாத்காரம் செய்யும்போது நான் அவரிடமிருந்து விடுபட போராடினேன் என்றால் சரிதான். முதலில் பலாத்காரம் செய்த நபர் பலவந்தமாக என்னை பலாத்காரம் செய்ததால் என்னை முகம், வாய், மார்பு மற்றும் மர்ம உறுப்புகளில் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை மிரட்டி ஒத்துக்கொள்ளவில்லை என்றால் நீ போகமுடியாது என்று சொல்லி பலாத்காரம் செய்தார்கள். நான் முதலில் பலாத்காரம் செய்த நபரிடமிருந்து விடுபடுவதற்கு போராடினினேனா என்றால் போராடினேன். நான் பலாத்காரம் செய்த நபரை முகம், கை, கால்களில் கீறினேன் என்றால் இல்லை, தள்ளிதான் விட்டேன். அவருக்கு காயங்கள் ஏற்பட்டதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அதை எப்படி நான் பார்க்கமுடியும் என்று சாட்சி சொன்னார். என்னை முதல் நபர் பலாத்காரம் செய்த நேரம் எவ்வளவு நேரம் என்றால் 5 நிமிடங்கள் இருக்கும். முதல் நபர் பலாத்காரம் செய்தபோது மற்ற இரண்டு நபர்களும் பக்கத்தில்தான் இருந்தார்கள் என்றால் இல்லை. முதல் நபர் பலாத்காரம் செய்யும்போது மற்ற இரண்டு நபர்கள் எவ்வளவு தூரத்தில் எங்கு இருந்தார்கள் என்றால் என் மாமாவை அவர்கள் இருவரும் கூட்டி சென்றதுதான் தெரியும். எவ்வளவு தூரத்தில் இருந்தார்கள் என்பது தெரியாது. முதல் நபர் பலாத்காரம் செய்து முடித்தபிறகு அந்த நபர் சென்று 2 வது நபரை அனுப்பி வைத்தான். முதல் நபர் போனபிறகு நான் தப்பித்து ஓட முயற்சி செய்யவில்லையா என்றால் என் மாமா கத்திமுனையில் இருப்பதால் முயற்சி செய்யவில்லை. என் மாமா கத்திமுனையில்தான் இருக்கிறார் என்பதை நான் பார்க்கவில்லை என்றால் கத்தி முனையில் அழைத்து சென்றதால் அவர்

கத்திமுனையில்தான் வைக்கப்பட்டிருப்பார் என நினைத்து கொண்டேன். முதலில் பலாத்காரம் செய்த நபர் என்னிடம் என் மாமாவை அனுப்புவதாக சொல்லிவிட்டு 2 வது நபரை அனுப்பி வைத்தான். 2 வது நபர் என்னை பலாத்காரம் செய்யும்போது நான் அணிந்திருந்த ரவிக்கை மற்றும் பிரா இரண்டையும் கிழித்துவிட்டார் என்றால் சரிதான். நான் அணிந்திருந்த பாவாடை, சேலையும் கிழிக்கப்பட்டன என்றால் இல்லை. 1 வது நபர் என்னுடைய மணிபர்ஸிலிருந்து பணம் எடுத்தது பலாத்காரம் செய்வதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் பணத்தை எடுத்துக்கொண்ட பிறகுதான் பலாத்காரம் செய்தார். 2 வது நபர் பலாத்காரம் செய்யும்போது முதலில் பலாத்காரம் செய்த நபர் அந்த இடத்தில்தான் இருந்தார் என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போது கிழிந்த ரவிக்கை மற்றும் பிரா இரண்டையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்கவும் இல்லை் நான் கொடுக்கவும் இல்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் வைத்து இந்த எதிரிகளால் எனக்கு எந்தவொரு பலாத்கார சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் மாமாவிடமும் என்னிடமும் முதலில் பலாத்காரம் செய்ததாக சொல்லப்படும் நபர் பணம் பறிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வைத்திருந்ததாக சொல்லப்படும் பர்ஸில் ஆதார்கார்டும் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. பர்ஸ்-ம் ஆதார்கார்டும் போலிசார் கேட்டு பின்னிட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. முதலில் பலாத்காரம் செய்த நபரையோ 2 வதாக பலாத்காரம் செய்த நபரையோ மற்ற நபரையோ காவல்நிலையம் தவிர வேறு எங்கு வைத்தும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் சொன்னமாதிரியான ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சொன்ன மாதிரி சிறுநீர் கழிக்க செல்லவும்

இல்லை, சத்தம் போடவும் இல்லை, என் மாமா ஓடிவரவும் இல்லை என்றால் சரியல்ல. என் மாமா சொன்ன ஆலோசனையின்பேரில்தான் காவல்நிலையத்தில் வைத்து நான் சொன்ன பெயர்கள் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன எல்லா விசயங்களும் பொய் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் முதலாவதாக என்னை பலாத்காரம் செய்த நபர் என்னை கெட்ட வார்த்தைகளாலோ சாதியை பற்றி இழிவாகவோ பேசவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த நாளுக்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் முதலாவதாக பலாத்காரம் செய்த நபரிடம் நீ எனக்கு தம்பி வயது என்னை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினேன் என சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. முதல் விசாரணையில் அஜித்திடம் நான் உன் காலில் கூட விழுகிறேன் என்று சொன்னபோது உன் மாமாவை விட சொல்கிறேன் என்று அவர் சென்றுவிட்டார் என போலிசார் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் அப்போது உள்ள மனநிலையில் நான் சொல்லாமல் இருந்திருக்கலாம். கமுதி அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டில் நாங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்திய இடத்தில் ரோட்டை கடந்தவுடன் கருவேல் காடு ஆரம்பித்துவிட்டதா என்றால் 5-10 அடி கடந்தவுடன்தான் கருவேல் காடு இருந்தது. போலிசார் என்னை விசாரிக்கும்போது என் மாமாவை பிடித்து வரும்போது ரூபாய் 3000 ஐ அஜித் பறித்து கொண்டார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை

விசாரிக்கும்போது அஜித் என்னை பலாத்காரம் செய்தபோது என் ஜாக்கெட்டுக்குள் மஞ்சள் கலர் பர்ஸில் இருந்த ரூபாய் 500ஐ பறித்து கொண்டார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து முடிந்த பிறகு நான் மீண்டும் நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றபோது என் அம்மா அப்பாவிடம் நடந்த விவரம் குறித்து சொன்னேனா என்றால் அப்போது அவர்கள் தோட்டத்திற்கு போயிருந்தார்கள். அவர்கள் திரும்பி வந்தபிறகு சம்பவம் பற்றி சொன்னேனா என்றால் சொல்லவில்லை இரண்டு நாட்கள் கழித்துதான் சொன்னேன். நான் சொன்ன மாதிரி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் சம்பவம் குறித்து என் அப்பா அம்மாவிடம் கூட சொல்லவில்லை என்றால் சரியல்ல, அசிங்கப்பட்டு சொல்லவில்லை. உண்மையில் நான் சொன்ன மாதிரி சம்பவம் நடைபெற்றிருநத்தால் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் அசிங்கப்பட்டதால் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. நான் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தது புகார் கொடுத்ததற்கு எவ்வளவு நாட்கள் கழித்து என்றால் ஞாபகமில்லை. இரண்டு வாரங்கள் இருக்கும். அந்த வாக்குமூலமும் போலிசார் சொல்லிக்கொடுத்துதான் சொன்னேன் என்றால் சரியல்ல. என் மாமாவின் ஆலோசனையின் படி புகார் கொடுக்கப்பட்டு போலிசார் ஆலோசனையின்படியும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததை அப்படியே ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து மேலும் 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார்.

சம்பவத்திற்கு முன்பு நான் 2ம் எதிரியை பார்த்துள்ளேனா என்றால்

இல்லை. அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த சாதியை சேர்ந்தவர் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 2ம் எதிரிக்கு என் சாதி குறித்து தெரியாதபோது எப்படி என் சாதி குறித்து அவர் பேசினார் என சொல்கிறேன் என்றால் என்னை அடித்து நீ என்ன சாதி என்று கேட்டார்கள். நான் சொன்னதால் என் சாதியை குறித்தும் திட்டி அடித்தார்கள். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 2ம் எதிரியை அடையாளம் காட்டி அவர்தான் தனது சாதி குறித்து அடித்து கேட்டு சாதி குறித்து பேசியதாக கூறுகிறார். 1ம் எதிரி என்னை எனது சாதி குறித்து கேட்டாரா என்றால் இல்லை. 2ம் எதிரிதான் என் ரவிக்கையை கழற்ற சொன்னார். நான் கழற்ற மறுத்ததால் அவர் வலுக்கட்டாயமாக ரவிக்கை மற்றும் பிராவை கிழித்து கழற்றினார். 2ம் எதிரி என்னை பலாத்காரம் செய்யும்போது எனக்கு காயங்கள் ஏற்பட்டதா என்றால் என்னுடைய விருப்பம் இல்லாமல் செய்தார்கள். கிழிக்கப்பட்ட ரவிக்கை மற்றும் பிரா இல்லாமல் நான் ஊருக்கு சென்றேனா என்றால் இல்லை, கிழிக்கப்பட்ட ரவிக்கை மற்றும் பிராவுடன்தான் இருந்தேன். அந்த நிலையில்தான் என்னை பலாத்காரம் செய்தார்கள். என்னை ஊருக்கு யார் கூட்டி சென்றது என்றால் என் மாமா என்னை கமுதி அரசு மருத்துவமனை அருகே இறக்கிவிட்டு சென்றுவிட்டார். நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேனா என்றால் இல்லை. கமுதியிலிருந்து என் ஊருக்கு நான் ஆட்டோவில் சென்றேன். ஆட்டோகாரருக்கு எவ்வளவு காசு கொடுத்தேன் என்றால் ஷேர் ஆட்டோவில் சென்றதால் 15 ரூபாய் கொடுத்தேன். அந்த 15 ரூபாய் எனக்கு எப்படி கிடைத்தது யார் கொடுத்தார்கள் என்றால் என் மாமா மருத்துவமனையில் இறக்கிவிடும்போது கொடுத்தார். போலிசார் என்னை

விசாரிக்கும்போது என் மாமா கமுதியில் இறக்கிவிட்ட விவரத்தையும் ரூபாய் 15 கொடுத்து சென்ற விவரத்தையும் சொன்னேனா என்றால் இல்லை. என் மாமா ஏன் வீட்டில் கொண்டு வந்துவிடாமல் இறக்கிவிட்டு சென்றார் என்றால் நான்தான் அசிங்கமாக இருக்கிறது என சொல்லி இறக்கிவிட சொன்னேன். நான் புகார் கொடுக்கும்போது காவல்நிலையத்தில யார் என்னிடம் புகார் வாங்கினார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் வாங்கினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அவர் உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நகல் கொடுத்தாரா என்றால் இல்லை, என்னை உடனே அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றது யார் என்றால் இரண்டு பெண் காவலர்கள். அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் மூன்று நாட்கள். மருத்துவமனையில் இருக்கும்போது காவல் உயர் அதிகாரிகளான காவல் ஆய்வாளரோ, டிஎஸ்பியோ, சார்பு ஆய்வாளரோ அங்கு வந்து விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னை பரிசோதனை செய்த மருத்துவர் என்னிடம் ஏதாவது விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மருத்துவர் என்னிடம் எத்தனை நபர்கள் என்னை பலாத்காரம் செய்தார்கள் என்று கேட்டார். நான் சொன்னேன். எத்தனை மணிக்கு எங்கு வைத்து என கேட்டாரா என்றால் இல்லை. மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை, காவல்நிலையத்திற்கு சென்று அதன்பிறகுதான் சென்றேன். நான் எதிரிகளை எங்கு வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் மருத்துவமனையில் இருக்கும்போது போட்டாவை காட்டி கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேன். அப்போது எனக்கு பெயர் எப்படி

தெரியும் என்றால் அஜித் என்ற பெயர் மட்டும்தான் தெரியும். பிணை போட்ட  பிறகு என்னுடைய ஆட்சேபனை போடும்போதுதான் தெரியும். பிணை போட்ட மனு காப்பி கொடுக்கப்பட்டதுதான் எனக்கு அவர்களின் பெயர் விவரங்கள் தெரியும். நான் புகார் கொடுக்கும்போதோ மருத்துவமனையில் இருக்கும்போதோ எதிரிகள் பெயர் விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருக்கும்போது போட்டோ காட்டி அடையாளம் காட்டியபோதுதான் அவர்களின் பெயர் விவரங்களை போலிசார் சொன்னார்கள்.  மருத்துவமனையில் இருந்து காவல்நிலையம் வந்து வீட்டிற்கு சென்றபிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆய்வாளரும் டிஎஸ்பியும் விசாரித்தார்கள்.  எந்த தேதியில் ஆய்வாளர், டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை.  நான் சொன்னதுபோல் 2ம் எதிரி என்னை பலாத்காரம் செய்யவில்லை என்றும் நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும் போலிசார் 2ம் எதிரியின்மீது  ஏற்கனவே பல வழக்குகள் பதிவு செய்ததால் இருந்த முன்விரோதத்தின் அடிப்படையில் என்னை வைத்து பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றும் அதற்கு அனுசரணையாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய பிறந்த தேதி 10.04.1994.  எனக்கு திருமணம் 2013ம் ஆண்டு நடந்தது, தேதி, மாதம் ஞாபகமில்லை. எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளன.  முதல் குழந்தைக்கு 11 வயது, அவன் பிறந்த தேதி 05.02.2014, 2வது குழந்தை 17.05.2017ம் தேதி பிறந்தான்.  நானும் என் கணவரும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால்

8 வருடங்களாக. நான் என் கணவரை விவாகரத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று என் தங்கையின் கணவர் முருகவேல் எங்கள் ஊரில் யார் விசேஷத்திற்கு வந்தார் என்றால் தெரியாது. நான்தான் என் மாமாவை மருத்துவமனைக்கு கூட்டி சென்றேன். என் வீட்டிலிருந்து அருப்புக்கோட்டையில் உள்ள மருத்துவமனை எத்தனை கி.மீ என்றால் தெரியாது. வீட்டிலிருந்து கமுதிக்கு அரை மணி நேரம். கமுதியிலிருந்து அருப்புகோட்டை மருத்துவமனை முக்கால் மணி நேரம். வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எவ்வளவு நேரத்திற்குள் சென்றோம் என்றால் 45 நிமிடங்கள் இருக்கும். 10 கி.மீ தூரத்தை 45 நிமிடங்களில் சென்றோமா என்றால் ஞாபகமில்லை. இருசக்கர வாகனத்தை எவ்வளவு வேகத்தில் ஓட்டி சென்றார் என்றால் எனக்கு வயிற்றில் வலி இருந்ததால் மெதுவாகத்தான் சென்றார். எனக்கு சர்க்கரை, சிறுநீரக வியாதி இருந்ததா என்றால் இல்லை. பொதுவாக பெண்கள் வெளியே கிளம்பும்போது இயற்கை கடன்களை வீட்டில் கழித்துவிட்டு செல்வது வழக்கம் என்றால் சரிதான். எனக்கு இயற்கை உபாதை அவசரமாக இருந்தால் கூட அந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரியல்ல. இடைச்சியூரணியிலிருந்து மருத்துவமனை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. என் சித்தப்பா பெயர் ஆத்தியப்பன். அவரது மகள் பெயர் இந்துமதி. நான் மருத்துவமனைக்கு முருகவேலை அழைத்து சென்றது என் சித்தப்பாவுக்கும் என் தங்கை இந்துமதிக்கும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் பற்றி என் சித்தப்பா, சித்தப்பா மகளிடம் சொன்னேனா என்றால் என் அப்பா, அம்மாவிடம் சொல்லவில்லை, அவர்களிடமும் சொல்லவில்லை. அஜித் என்ற

பையன் கருப்பு கலர் சட்டையும், லுங்கியும் அணிந்திருந்தான். பாலகுமார் என்பவர் வெள்ளை கலர் பூ போட்ட சட்டையும் கைலியும் உடுத்தியிருந்தான். 3வது பையன் வந்தவுடன் கத்தியை காட்டி என் மாமாவை கூட்டி சென்றதால் அவர் என்ன உடை உடுத்தியிருந்தார் என்று நான் சரியாக கவனிக்கவில்லை, அந்த பையனை நான் சரியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பையனுக்கு 20 வயதுக்குள் இருக்கும் என்பது மட்டும் தெரியும். சம்பவத்தின்போது என்னுடைய ரவிக்கை மற்றும் பிரா கிழியவில்லை என்பதால் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல, போலிசார் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை. நான் எழுதிய புகார் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் ஞாபகமில்லை. புகாரில் உள்ள எழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். புகாரில் இப்படிக்கு என உள்ளதற்கும் கடைசி வரிக்கும் இடைவெளி உள்ளது என்றும் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கியிருந்தால் மட்டுமே அந்த இடைவெளி இருக்கும் என்று சொன்னால் நான் எழுதித்தான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். இப்படிக்கு என எழுதப்பட்டுள்ள இடத்திற்கும் என் கையெழுத்திற்கும் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். புகார் வாசகங்களில் எழுதப்பட்ட பேனா மையிற்கும் நான் கையெழுத்து போட்ட பேனா மையிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். நான் எழுதிக்கொண்டுபோய் கொடுத்தேன். காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டு கொடுக்கவேண்டும் என்று சொன்னதால் அப்போது அங்கிருந்த பேனாவை கொண்டு கையெழுத்து போட்டு கொடுத்தேன். என்னை கையெழுத்து போட சொன்னது யார் என்றால் பெண் சார்பு ஆய்வாளர். நான் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றபோது கமுதி கோட்டை

மேட்டை சேர்ந்த மதிவதனி என்ற பெண் தனது மகள் புஷ்பராகவியை காணவில்லை என புகார் கொடுத்ததால் அவரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அப்போது 3ம் எதிரியின் பெயர் சூர்யா என காவலர்கள் சொன்னார்கள் என்றால் சரியல்ல. பிணை மனு போட்டு போலிசார் எனக்கு ஆட்சேபனை செய்ய அறிவிப்பு கொடுத்தபோது எதிரிகள் பெயர் விவரங்கள் முழுவதும் தெரியும். கமுதி கோட்டை மேட்டை சேர்ந்த அரசியலில் செல்வாக்கு மிக்கவரும் பணக்காரருமான மதிவதனி என்பவரின் மகள் புஷ்பராகவியை 3ம் எதிரி சூர்யா விரும்பியதால் அவரை தேடி புஷ்பராகவி வீட்டை வெளியே வந்துவிட்டது என்றும இருவரையும் பிடிக்க கமுதி காவலர்கள் பெண்ணை அவரது வீட்டில் ஒப்படைத்து காதலை பிரித்து பழிவாங்க வேண்டும் என்பதற்காக தனது பணபலத்தையும் அரசியல் பலத்தையும் பயன்படுத்தி எனக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் 3ம் நபர் யார் என தெரியாததால் 3ம் எதிரியாக சேர்த்து வழக்கு போட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 19/2024** Dated:. 07.11.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**அ.சா.2 முருகவேல்**

**மனுவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தற்போது சிவகங்கை நகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் காவல்பணியில் சேர்ந்ததில் இருந்து சட்டம் ஒழுங்கு காவல்துறையில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் முதலில் ஆயுதப்படையிலும் பிறகு சட்டம் ஒழுங்கு துறையிலும் பணிபுரிந்தேன். முதல்நிலை காவலராக பதவி உயர்வு பெற்று இரண்டு வருடங்கள் ஆகிறது. ஒரு குற்ற சம்பவம் நடைபெற்றால் உடனடியாக புகார் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஏற்பட்ட குற்றம் மிக கடுமையான குற்றம் என்பதுடன் நானும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் என்றால் சரிதான். நான் சம்பவம் நடைபெற்ற பிறகு கமுதி வந்து ஆட்டோவில் அ.சா.1 ஐ ஏற்றிவிட்டு நெறிஞ்சிப்பட்டி வரை சென்று அவர் சேர்ந்துவிட்டார் என்பதை உறுதி செய்தபிறகு இளையான்குடிக்கு அருகே உள்ள என் ஊருக்கு சென்றேன். தண்டனைக்குரிய குற்றம் சமூகத்திற்கு எதிரான குற்றம் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு ஒரு குற்ற சம்பவம் நடைபெற்றது தெரிந்தது எவறாக இருந்தாலும் புகார் கொடுக்கலாம் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் ஒரு குற்ற சம்பவமே நடக்காத காரணத்தால்தான் காவலராக இருக்கக்கூடிய நான் குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராக இருந்தும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நெறிஞ்சிப்பட்டிக்கு நான் அடிக்கடி வந்து செல்வேன் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்தபோது என் குடும்பம் இளையான்குடிக்கு அருகே கீழாயூர் காலனியில் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகள் என்ன சாதியை சேர்ந்தவர்கள் என்பது தெரியாது என்றால் சரிதான். கமுதியிலிருந்து இடைச்சியூரணி விலக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ. கமுதி–அருப்புக்கோட்டை ரோட்டில் இருந்து சம்பவ இடம் எந்த திசையில் உள்ளது என்றால் திசை தெரியாது. ஆனால் அந்த ரோட்டிற்கு இடதுபுறம் உள்ள உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே. மெயின் ரோட்டிற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீ. சம்பவம் நடந்த இடத்திற்கு கிழக்கேயும் மேற்கேயும் அடர்த்தியான காட்டு கருவேல் காடு உள்ளது என்றால் சரிதான். நான் முதலில் உள்ளே செல்லவில்லை என்றும் அ.சா.1 சத்தம் கேட்டுதான் உள்ளே சென்றேன் என்றால் சரிதான். நான் உள்ளே போனபோது முதலில் என்னிடம் பணம் பறித்ததுதான் முதல் சம்பவம் என்றால் அ.சா.1 ஐ சுற்றி நின்றார்கள். என்னிடம் பணம் பறித்தது அ.சா.1 இருந்த இடத்திலா அல்லது வேறு இடத்திலா என்றால் அவர் நின்ற இடத்டதில்தான். அதன்பிறகு அ.சா. 1 தாமரை செல்வி நின்ற இடத்திலிருந்து என்னை அவருக்கு தெரியாத இடத்திற்கு கூட்டி சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் நான் கற்பழிப்பு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னை தனியாக அழைத்து சென்றபிறகு எவ்வளவு நேரம் கழித்து மீண்டும் அ.சா.1 தாமரை செல்வி நின்ற இடத்திற்கு வந்தேன் என்றால் 20 நிமிடங்கள் இருக்கும். நான் அ.சா.1 தாமரை செல்வி வந்த இடத்திற்கு அவர் எல்லா உடைகளுடன்தான் இருந்தார் என்றால் சேலையால் உடம்பை சுற்றி மூடியிருந்தார். சம்பவத்திற்கு பிறகு நான் கமுதிக்கு சென்றபிறகும் நான்

காவலராக இருந்தும் புகார் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் பாதிக்கப்பட்ட பெண் பயத்தில் மறுத்துவிட்டார். என்னை பொருத்தும் குற்றம் நடந்ததால் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் கற்பழிப்பு வழக்கு என்பதால் நான் கொடுக்கவில்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் என்னை பொருத்தும் குற்றம் நடந்ததால் அதற்காக நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதால் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தாமரைச் செல்விக்கும் எனக்கும் தவறான உறவு இருப்பதாக சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. தவறான நோக்கத்தோடு நாங்கள் வேறு ஒரு இடத்திற்கு சென்றோம் என்றும் அது வெளியில் தெரிந்துவிட்டதால் அந்த நேரத்தில் அந்த எதிரிகளை போலிசார் வேறு ஒரு வழக்கு சம்பந்தமாக பிடித்து காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றும் இந்த சம்பவத்தை வைத்து போலிசாரே பொய்யாக எதிரிகள் மீது வழக்கை ஜோடித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் ஒவ்வொரு எதிரிகளும என்னன்ன கலரில் உடை அணிந்திருந்தார்கள் என் சொன்னதும், ஆயுதங்களை வைத்து என்னையும் அ.சா.1 தாமரை செல்வியையும் மிரட்டி பணம் பறித்ததாக சொல்வதும், அ.சா.1 ஐ பலாத்காரம் செய்ததாக அ.சா1 என்னிடம் சொன்னதாக சொல்லியதும், மற்றும் முதல்விசாரணையில் நான் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மையில்லை என்றால் சரியல்ல. போலிசார் எதிரிகளை நீதிமன்றத்திற்கு அடிக்கடி

கொண்டுவரும்போதும் மற்றும் ஜாமீன் மனு போடும்போது அதில் உள்ள விவரங்களை போலிசார் என்னிடம் சொன்னபோது எதிரிகள் பெயர் விவரங்களை வைத்து நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 தாமரை செல்வியை கமுதியில் எந்த இடத்தில் இறக்கிவிட்டேன் என்றால் கமுதி அரசு மருத்துவமனை முன்பாக. என்னிடம் அப்போது பணம் இருந்ததா என்றால் இல்லை. அ.சா.1 தாமரை செல்வி கமுதியிலிருந்து ஊருக்கு எப்படி சென்றார் என்றால் ஆட்டோவில். ஆட்டோவிற்கு பணம் கொடுத்தது யார் என்றால் அ.சா.1–னிடம்தான் கேட்கவேண்டும். நான் அ.சா.1க்கு பணம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எவ்வளவு கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. என் பாக்கெட்டில் இருந்த பணத்தை மட்டும்தான் எதிரிகள் பறித்து கொண்டார்கள். பவுச்சில் எவ்வளவு பணம் வைத்திருந்தேன் என்றால் ஞாபகமில்லை. அ.சா.1 தாமரை செல்வியை நெறிஞ்சிப்பட்டி வரை கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தேனா என்றால் அவர் ஆட்டோவில் சென்றார். நான் நெறிஞ்சிப்பட்டி வரை சென்றுவிட்டு திரும்பிவிட்டேன். அ.சா.1 க்கு மிகப்பெரிய சம்பவம் நடைபெற்ற பிறகும் நான் ஏன் வீட்டிற்கு அழைத்து சென்று நடந்த சம்பவத்தை கூறி விட்டு விட்டு வரவில்லை என்றால் அ.சா.1 யாரிடமாவது சொன்னால் நான் செத்துவிடுவேன் என்று கூறியதால் சொல்லவில்லை. அ.சா.1 புகார் கொடுக்க சென்றபோது நானும் சென்றேனா என்றால் புகார் கொடுத்த பிறகு சென்றேன். புகார் கொடுத்தபோது அ.சா.1 மட்டும் சென்றாரா வேறு யாரும் சென்றார்களா என்றால் தெரியாது. நான் புகார் கொடுத்த அன்றே காவல்நிலையத்திற்கு இரவு 7.00 மணியளவில் சென்றேன்.

காவல்நிலையத்திற்கு நான் சென்றபோது யார் இருந்தார்கள் என்றால் பெண் சார்பு ஆய்வாளரும் ஆய்வாளரும் இருந்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது அ.சா.1 தாமரை செல்வி காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். அ.சா.1 கொடுத்த புகாரை நான் வாங்கி படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும்போது அ.சா.1 அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. அ.சா.1 எங்கிருந்தார் என்றால் தெரியாது. அ.சா.1 மருத்துவமனையில் இருக்கும்போது நான் போய் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை நான் எப்போதாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் என்ன சாதி என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்ன சாதி என்று சம்பவத்திற்கு முன்பு எதிரிகளுக்கு தெரியுமா என்றால் சம்பவத்தின்போது எதிரிகள் மூவரும் என் சாதியையும் அ.சா.1 தாமரை செல்வி சாதியையும் கேட்டார்கள். அ.சா.1 தாமரை செல்வியும் நானும் ஒரே இடத்தில் இருக்கும்டபோதுதான் எங்கள் சாதியை கேட்டார்களா என்றால் ஆமாம். அதன்பிறகு என்ன செய்தார்கள் என்றால் கத்தியை வைத்து ன்னை கூட்டி சென்றுவிட்டார்கள். சம்பவ நாளன்று நான் விடுப்பில் இருந்தேனா என்றால் ஆமாம். விடுப்பு எடுத்துவிட்டு நெறிஞ்சிப்பட்டி வந்தேன் என்றால் அ.சா.1 தாமரை செல்வியை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக வந்தேன். தாமரை செல்வி எனக்கு எப்படி மருமகள் என்றால் தாமரை செல்வியின் அப்பா எனக்கு தாய்மாமன் மகன், தாமரை செல்வியின் அம்மா எனக்கு பெரியம்மா மகள் அக்கா. அதனால் எனக்கு மருமகள் உறவு. எனக்கு சொந்த ஊர்

இளையான்குடி அருகே என்றால் சரிதான். என்னுடைய மனைவி தாமரை செல்விக்கு தங்கை உறவு. என் மனைவியின் அப்பாவும் தாமரை செல்வியின் அப்பாவும் உடன்பிறந்தவர்கள். தாமரை செல்வியின் அப்பா பெயர் போஸ். அம்மா பெயர் காளீஸ்வரி. 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தி என்ன கத்தி, அதன் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால், இரும்பு கத்தி கைப்பிடி மரத்தால் ஆனது. கத்தியின் மொத்த நீளம் 1 அடி இருக்கும். கத்தியின் கைப்பிடி என்ன கலரில் இருந்தது என்றால் மரக்கட்டை கைப்பிடி. மற்ற எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தி என்ன நீளம் இருக்கும் என்றால் மூன்று நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்திகளும் ஒரு அடி நீளம் இருக்கும். கத்தியின் நிறம் என்ன என்றால் ஞாபகமில்லை. கத்திகளை போலிசார் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றும்போது என்னை அழைத்து சென்று கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எதிரிகளிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது என் முன்னிலையில் பெற்றார்களா என்றால் இல்லை. அ.சா.1 தாமரை செல்வியை புகார் கொடுத்த பின்பு எப்போது சந்தித்தேன் என்றால் 10 நாட்கள் கழித்து பார்த்தேன். சம்பவம் ஊரில் உள்ளவர்களுக்கு தெரியவந்திருக்கும் என்றால் இல்லை. சம்பவம் குறித்து கிராமத்தில் உள்ளவர்கள் யாருக்கும் தெரியாதா என்றால் தெரியாது. சாட்சிகள் கரண் மற்றும் அவரது அம்மா இடைச்சியூரணி விலக்கு அருகே எங்களை பார்த்து விட்டு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் அங்கு வைத்து பார்க்கவில்லை, கமுதி குண்டாறு பாலத்தில் வைத்து பார்த்தார்கள். அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்துகொண்டேனா அவர்களாகவே சொன்னார்களா என்றால் நானும் கேட்டேன். அவர்களும் சொன்னார்கள். அவர்கள் இருவரும்

எனக்கு உறவினர்களா என்றால் நெருங்கிய உறவினர்கள் அல்ல. அவர்கள் என் சாதியை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். அ.சா.1 சிறுநீர் கழிக்க நின்ற இடத்தில் ரோட்டில் இருந்து இறங்கிய உடனே கருவேல் மரங்கள் உள்ளன என்றால் சரிதான். அ.சா.1 100 மீ தள்ளி ஏன் செல்ல வேண்டும் என்றால் மறைவான இடம் வேண்டும் என்பதாலும் ரோட்டில் நான் நின்று கொண்டிருப்பதாலும் சற்று தள்ளி சென்றார். எதிரிகள் எந்த பகுதியில் இருந்து வந்தார்கள் என்றால் நான் உள்ளே சென்றபோது அவர்கள் மூவரும் சுற்றி வளைத்து நின்றிருந்தார்கள். எங்கிருந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் எதிரிகளுக்கும இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலிசாருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் உள்ளது என்றும், போலிசார் போலிசாகிய என்னை பயன்படுத்தி பொய் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் என்னுடைய சாட்சியங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 தாமரை செல்வி மருத்துவமனை செல்வதற்காக அழைத்ததன் பேரில் நான் சென்றேனா என்றால் அ.சா.1 ஊரில் ஒரு விசேஷம் , அங்கு சென்றிருந்தபோது அழைத்தார். என்ன விசேஷம் என்றால் சிறுகோவில் கட்டி விசேஷம். அந்த கோவில் பெயர் என்ன என்றால் மாரியம்மன் கோவில். அந்த ஊரில் உள்ளவர்களுக்கு அந்த கோவில் விசேஷம் பற்றி தெரியும் என்றால் சரிதான். அன்றைய தினம் திருவிழா நடக்கவில்லை, புதிதாக கோவில் கட்டியிருந்ததால் சாமி கும்பிட சென்றிருந்தேன். நான் நெறிஞ்சிப்பட்டிக்கு வந்த விவரம் என் மனைவி, மாமனாருக்கு தெரியுமா என்றால் மாமனாருக்கும், தாமரை செல்வியின்

அப்பா அம்மாவிற்கு தெரியும். என் மனைவிக்கு தெரியாது. என் மனைவியிடம் ஏன் சொல்லிவிட்டு செல்லவில்லை என்றால் என் மாமனார் வரச்சொன்னதால் சென்றேன். தாமரை செல்வி தொலைபேசியில் என்னிடம் பேசுவாரா என்றால் பேசுவார். அ.சா.1 தாமரைசெல்வியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அ.சா.1 சொந்தமாக தொலைபேசி பயன்படுத்தி வந்தார் என்றால் சரிதான். நெறிஞ்சிப்பட்டியில் இருந்து நான் அ.சா.1 ஐ அழைத்து செல்லும்போது யார் யாருக்கு தெரியும் என்றால் தாமரை செல்வியின் பெற்றோர்களுக்கு தெரியும். அ.சா.1 தாமரை செல்வி அவரது செல்போனை எடுத்து வந்தாரா என்றால் தெரியாது. பொதுவாக வெளியே செல்லும்போது செல்போனை எடுத்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். நான் அ.சா.1 வீட்டில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்புனேன் என்றால் 10.45 மணிக்கு. ஏற்கனவே சிகிச்சை பெற்று வரும் நோய்க்கு பழைய சிகிச்சை ஆவணங்களை எடுத்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். அ.சா.1 குடலிறக்க நோய்க்கு ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்யும்போது எடுத்துக்கொண்ட மருத்துவ ஆவணங்களை கொண்டு வந்தாரா என்றால் அவர் பர்ஸ் வைத்திருந்தார். அதற்குள் என்ன வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. அந்த பர்ஸ் என்ன கலர் என்றால் மஞ்சள் கலர். அதற்குள் ஆவணங்கள் வைக்கக்கூடிய அளவிற்கு இடவசதி இருந்ததா என்றால் இருந்தது. பர்ஸின் அளவு தெரியுமா என்றால் தெரியாது. பைக்கில் எவ்வளவு வேகத்தில் சென்றேன் என்றால் 30-40. வீட்டில் இருந்து சம்பவம் நடந்த இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 27 கி.மீ. சம்பவ இடத்திற்கு எவ்வளவு நேரத்திற்குள் சென்றேன் என்றால் ஒன்றரை மணி நேரம். இயற்கை உபாதை கழிக்க நின்ற இடத்தில் எதார்த்தமாக

வாகனங்களோ வேறு நபர்களோ இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவத்தின்போது கத்தி கூர்மையாக இருந்ததா அல்லது மலுங்கலாக இருந்ததா என்றால் கூர்மையாகத்தான் இருந்தது. பொதுவாக கத்தி கூர்மையாக இருந்தால் சிறுகாயம் ஏற்படும் என்றால் காயத்தை ஏற்படுத்தும் வகையில் வைக்கவில்லை. மூன்று நபர்கள் கைகளில் ஏற்கனவே கத்தி இருந்ததா என்றால் இருந்தது. மூன்று நபர்களும் எந்த ஆடையை அணிந்திருந்தார்கள் என்றால், அஜித் கருப்பு கலர் சட்டையும், கைலியும் , கைலியின் நிறம் ஞாபகமில்லை. பாலகுமார் வெள்ளை கலர் பூ போட்ட சட்டை, கைலியும், கைலியின் நிறம் ஞாபகமில்லை, சூர்யா கருப்பு கலர் சட்டை, வெள்ளை கலர் கைலி அணிந்திருந்தார்கள். ஒரு நபர் மாறி செல்லும்போது ஒரு நபர் என் கழுத்தில் கத்தி வைத்திருந்தாரா என்றால் முதல் நபர் வந்தபிறகுதான் இரண்டாவது நபர் சென்றார். பொதுவாக தனியார் மருத்துவமனைக்கு சென்றால் குறைந்தபட்சம் ரூபாய் 1000 தேவைப்படும் என்றால் சரிதான். நான்தான் மருத்துவத்திற்கான செலவை செய்வேனா என்றால் அருப்புக்கோட்டையில் அ.சா.1 ன் சித்தி உள்ளார். அவரிடம் பணம் வாங்கிக்கொள்வதாக சொன்னார். சம்பவம் முடிந்து கிளம்பும்போது எதிரிகள் எந்த வாகனத்தில் சென்றார்கள் என்றால் TN 61 B 9369 கருப்பு கலர் பைக். மேற்கண்ட வாகனம் எங்கிருந்தது என்றால் சம்பவ இடத்தில் இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்குள் ஆட்கள் செல்வதே கடினம் என்றும் முட்கள் நிறைந்த பகுதி என்பதால் வாகனங்கள் செல்ல இயலாது என்றால் தவறு. சம்பவ இடத்திலிருந்து திரும்பி வரும்போது யார் யாரை சந்தித்தோம் என்றால் கரண், முனீஸ்வரி இருவரையும் சந்தித்தோம். எங்கு வைத்து சந்தித்தோம் என்றால் ஏற்கனவே நின்ற இடத்தில். அவர்கள் எங்கு சென்றார்கள் என்று

தெரியாது. நான் அ.சா.1 தாமரை செல்வியை கமுதி அரசு மருத்துவமனை முன்பாக இறக்கிவிட்டு சென்றேன். அ.சா.1 புகார் அளிக்க முடிவு செய்தபிறகு என்னிடம் கேட்டுவிட்டு புகார் அளித்தாரா இல்லை அவராகவே அளித்தாரா என்றால் அவராகவே அளித்தார். நான் யார் சொல்லி காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் அ.சா.1 காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க செல்வதாக சொன்னதால் நானும் சென்றேன். என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் சுமார் ஒரு மணி நேரம். அதன்பிறகு என்னை விசாரித்தார்களா என்றால் 03.02.2024ம் தேதி விசாரித்தார்கள். போலிசார் என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. எதிரிகளின் பெயர்களை யார் எனக்கு குறிப்பிட்டு சொன்னது என்றால் சம்பவத்தன்று ஒரு பெயரை மட்டும் மற்றொரு நபர் சொன்னதால் தெரியும். மற்ற நபர்களின் பெயர்கள் எப்படி தெரியும் என்றால் பிணை ஆட்சேபனை தெரிவிக்க கோரும்போது தெரியும். நான் காவல் ஆய்வாளர், டிஎஸ்பி மற்றும் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளிக்கும்போது ஒரே மாதிரியாக அல்லது மாறி மாறி கொடுத்தேனா என்றால் ஒரே மாதிரியாகத்தான் கொடுத்தேன். நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது 3ம் எதிரி சூர்யாவை வேறொரு வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. கமுதி கோட்டை மேட்டை சேர்ந்த மதிவதனி என்ற நபரின் மகள் புஷ்பராகவியை காணவில்லை என்ற புகாரின் அடிப்படையில் 3ம் எதிரி சூர்யாவை காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் அதை தெரிந்தும் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. 1,2 எதிரிகள் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதால் வழக்கில் சேர்த்து 3ம் எதிரி யார் என்று காவல்துறையினரால் இனம் காணமுடியாததாலும் புஷ்பராகவியின் குடும்பத்தினர் மிக்க அரசியல் செல்வாக்கும் பணபலமும் படைத்தவர்கள் என்பதாலும் புஷ்பராகவியை விரும்பிய சூர்யாவை பழிவாங்கும் நோக்கோடு இந்த வழக்கில் காவலர்கள் வலியுறுத்தி கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் எனக்கும் தாமரை செல்விக்கும் தவறான உறவு உள்ளது என்பதை காவல்துறையினர் வெளியில் சொல்லிவிடுவார்கள் என்ற பயத்தில் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 3ம் எதிரி சூர்யாவை வேறு ஒரு மூன்றாவது நபர் செய்த தவறை சூர்யா பெயரை குறிப்பிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)